**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், உத்திரமேரூர்.**

**முன்னிலை:** Ms. R.கிருத்தியா, B.A.,LL.B.,

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்

2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24-ம் நாள் வெள்ளிகிழமை

**அசல் வழக்கு எண். 44 / 2025**

**CNR No. TNKP10000914-2024**

1. மங்கலட்சுமி
2. மைனர். லோகேஸ்வரன்

(மைனர் வாதிக்கு கார்டியனாக 1ம் வாதி)

.... வாதிகள்

**/எதிர்/**

1. திரு.வட்டாட்சியர், உத்திரமேரூர் வட்டம்
2. உயர்திரு. மாவட்ட ஆட்சித்தலைவர், காஞ்சிபுரம் மாவட்டம்.

.... பிரதிவாதிகள்

-----

இவ்வழக்கு 16.07.2025-ம் தேதி கோப்புக்கு எடுக்கப்பட்டு 19.02.2026-ம் தேதி என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. D. கண்ணபிரான், திரு. R. சிலம்பரசன், திரு. E. வெங்கடேசன் ஆகியோர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு. A.K.ரமேஷ்பாபு அவர்கள் முன்னிலையாகி பதிலுரை தாக்கல் செய்யப்படாத காரணத்தினால் பிரதிவாதிகள் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டு ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்பட்டும், வாதிகள் தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை என் கவனமான பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்புரை**

கடந்த 03.06.2024 ம் தேதி இறந்து போன திருமால் த/பெ. முருகன் என்பவருக்கு வாதிகள் வாரிசுகள் என்று விளம்புகை பரிகாரம் வழங்கக்கோரியும், 1ம் பிரதிவாதி வாரிசு சான்று வழங்க செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்:**

1ம் வாதி காலம்சென்ற திருமால் அவர்களின் மனைவி ஆவார். 2ம் வாதி மேற்படி இறந்து போன திருமால் அவர்களின் பிள்ளை ஆவார். 1ம் வாதிக்கும், திருமால் என்பவருக்கும் 14 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் செய்யப்பட்டு மேற்படி திருமண பந்தத்தின் மூலம் 2ம் வாதி பிறந்தார். மேற்படி திருமால் வாதிகளை வாரிசுகளாக விட்டு கடந்த 03.06.2024 ம் தேதி காலமாகி விட்டார். மேற்படி திருமால் அவர்களின் தந்தையான முருகன் என்பவர் கடந்த 28.12.2005 ம் தேதியும், தாயாரான சரோஜா அம்மாள் 30 ஆண்டுகளுக்கு முன்பாகவே காலமாகி விட்டனர். எனவே இறந்து போன திருமால் என்பவருக்கு வாதிகள் மட்டுமே வாரிசுகள் ஆவர். மேற்படி இறந்து போன திருமால் அவர்களின் வாரிசு சான்று வேண்டி 1ம் பிரதிவாதி அலுவலகத்தை அணுகிய போது 1ம் பிரதிவாதி அலுவலகம் மனுவை நிராகரித்து நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு அறிவுறுத்தியதால் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பிரதிவாதிகள் தரப்பில் பதிலுரை தாக்கல் செய்யப்படாத காரணத்தால் பிரதிவாதிகள் இவ்வழக்கில் ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்பட்டுள்ளனர்.

3) வாதிகள் தரப்பில் 1ம் வாதி மங்கலட்சுமி வா.சா.1 ஆகவும், முனியம்மாள் என்பவர் வா.சா.2 ஆகவும் விசாரணை செய்யப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் இவ்வழக்கில் ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்பட்டுள்ளனர்.

வாதிதரப்பு வழக்கறிஞர்களின் வாய்மொழி விவாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் வாதி கோரும் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா ? இல்லையா ? என்பதேயாகும்.**

1ம் வாதியின் கணவரும், 2ம் வாதியின் தந்தையுமான திருமால் என்பவர் கடந்த 03.06.2024 ம் தேதி காலமாகியுள்ளார். அவருடைய இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி திருமால் அவர்களின் தாய் தந்தையரும் திருமால் இறப்பதற்கு முன்பே காலமாகியுள்ளனர். 1ம் பிரதிவாதி அலுவலகத்தில் வாரிசு சான்று வேண்டி வாதிகள் மனு செய்துள்ளனர். மேற்படி மனுவானது 1ம் பிரதிவாதி அலுவலகத்தால் திருப்பப்பட்டுள்ளது. மேற்படி திருப்பப்பட்ட மேலெழுத்து வா.சா.ஆ.7 ஆக குறியீடு

செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.7 ஆவணத்தை பரிசீலிக்கும் போது திருமால் என்பவருக்கு 1ம் வாதி இரண்டாவது மனைவி என்பதால் வாரிசு சான்று வழங்க முடியாது என திருப்பப்பட்டுள்ளது. மேற்படி சங்கதிகளை பொறுத்து வாதிகள் தரப்பிலும் எந்தவிதமான ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதிகளும் இவ்வழக்கில் முன்னிலையாகி இறந்து போன திருமால் என்பவருக்கு 1ம் வாதி இரண்டாவது மனைவி என்பதை நிரூபிக்கத்தவறிவிட்டது. இறந்து போன திருமால் என்பவருக்கு 2ம் வாதி சட்டப்படியான வாரிசு ஆவார்.

எனவே மேற்படி இந்துவாரிசுரிமை சட்டம் பிரிவு 8 ன்படி இறந்து போன திருமால் என்பவருக்கு 2ம் வாதி முதல்நிலை வாரிசு ஆவார். 2ம் வாதி மட்டும் இறந்து போன திருமால் என்பவருக்கு வாரிசு என்ற விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. 1ம் வாதியை பொறுத்து கேட்ட விளம்புகை பரிகாரம் தள்ளுபடி செய்யப்படுகிறது.

**8) இறுதியாக**

| | |
|---|---|
| 1 | வழக்கு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.<br>வாதி கோரியபடி இறந்துபோன திருமால் த/பெ. முருகன் என்பவருக்கு 2ம் வாதி முதல்நிலை வாரிசு என்று விளம்புகை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது. 1ம் வாதியை பொறுத்து விளம்புகை பரிகாரம் தள்ளுபடி செய்யப்படுகிறது. |
| 2 | 2ம் வாதி இறந்து போன திருமால் என்பவருக்கு வாரிசு என்று வாரிசு சான்று வழங்க வேண்டும் என்று செயலுறுத்து கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது. |

| | |
|---|---|
| 3 | வழக்கின் செலவுத்தொகை இல்லை. |

இத்தீர்ப்புரை முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 24.04.2026-ம் தேதியில் அவையறிய பகாப்பட்டது.

R KRITYA
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by R KRITYA
Location: UTHIRAMERUR
Date: 2026.04.24 16:40:22 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
உத்திரமேரூர்.

**வாதிகள் தரப்பு சாட்சி**

1. வா.சா.1 மங்கலட்சுமி (1ம் வாதி)
2. வா.சா.2 முனியம்மாள் (மூன்றாம் தரப்பினர்)

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1 | வா.சா.ஆ.1 | திருமால் இறப்பு சான்றிதழ் | கணினி நகல் |
| 2 | வா.சா.ஆ.2 | குடும்ப அட்டை | நகல் |
| 3 | வா.சா.ஆ.3 | 1ம் வாதியின் ஆதார் அட்டை | நகல் |
| 4 | வா.சா.ஆ.4 | 2ம் வாதியின் ஆதார் அட்டை | நகல் |
| 5 | வா.சா.ஆ.5 | 2ம் வாதியின் பிறப்பு சான்றிதழ் | நகல் |
| 6 | வா.சா.ஆ.6 | மனு அளித்ததற்கான ஒப்புகை சீட்டு | கணினி நகல் |
| 7 | வா.சா.ஆ.7 | வட்டாட்சியர் வழங்கிய மேலெழுத்து | கணினி நகல் |
| 8 | வா.சா.ஆ.8 | வா.சா.2 ன் ஆதார் அட்டை | நகல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் இல்லை.**

R KRITYA
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by R KRITYA
Location: UTHIRAMERUR
Date: 2026.04.24 16:40:29 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
உத்திரமேரூர்.

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHIRAMERUR.

**OS No. 3/2024**

**FAIR JUDGMENT**

DATE 06.12.2025